ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

சிந்துபூந்துறைத் தக்ஷிணாமூர்த்தி மடாலயத்தில்
எழுந்தருளியிருக்கும்

# ஸ்ரீ கேமன் முனிவர்

# வெண்பா வந்தாதி.

இஃது

சிந்துபூந்துறை மக-ா-ா-ஸ்ரீ ரு. பாண்டியம்பிள்ளை
யவர்கள் குமாரர் கணேசன் நிட்டிங் கம்பேனிக்
குரியவரான உண்டியல்கடை மக-ா-ா-ஸ்ரீ
ரு. பா. வள்ளிநாயகம் பிள்ளையவர்கள்
விரும்பியவண்ணம்,

தச்சநல்லூர்
மக-ா-ா-ஸ்ரீ ரயிட்டர் பர்லுநாயுடு அவர்களின்
கனிஷ்டபுத்திரரும், சிந்துபூந்துறைவாசரும்,
பேன்சன் போலீஸ் இன்ஸ்பெக்டருமான
**B. B. நாராயணசுவாமி நாயுடு அவர்கள்**
இயற்றி

பாளையங்கோட்டை
ஆண்டவன் அச்சாபிஸில்
பதிப்பிக்கது.

**1918.**

ஸ்ரீ

# சிறப்புப்பாயிரம்.

திருநெல்வேலிப்பாலம் சிந்துபூந்துறைத் தக்ஷிணாமூர்த்தி.
மடாலயவதிபதியவர்களாகிய பிரம்மஸ்ரீ
M. வேதநாயகசுவாமிகள் இயற்றிய சாத்துக்கவி.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மணிகொண்ட வாரிதிசூழ் மாநிலமின் மாமுகமா வயங்கு வாய்மைக்
கணிகொண்ட கரும்புமுத்தங் கால்கன்னி நாடீடது கண்ணே வையை
யணிகொண்ட வாலவா யெனுநகரம் வலதுகண் ணாருங் காணும்
திணிகொண்ட வனவரதன் றிகழ்நெல்லை நகரமெனச் சிறந்த தாமால். (1)

அன்னதிரு நெல்வேலி யரும்பெறனன் னகர்க்கொளியா யமைந்துநின்ற
செந்நெல்வளந் திகழ்சிந்து பூந்துறையென் றோர்நகரஞ் சிறந்து வீற
என்முயல்வேற் றினிதிழைத்த வெழில்கொண்ட மடாலயமொன் றிமைப்
[பதாங்குத்
தென்முகன்மா கருணையுடன் றிருக்கோயில் கொண்டருளிச் சிறந்தானம்மா.
(2)

அம்மரபு பற்றியதைத் தக்ஷிணா மூர்த்திமடா லயமா மென்ப
செம்மையினா லவணட்ட சித்திகள்கை கட்டிமுன்றிற் சேவைசெய்ய
எம்மதருஞ் சம்மதரா யேத்திசைப்ப வீற்றிருந்தே யெம்ம னோர்க்கு
மெய்ம்முழுஞா னானந்தம் விளக்கிநின்றான் கேமன்முனி மேதக்கோனே.
(3)

அம்முனிதன் வரலாற்றை யகிலர்க்கு மறிவுறுத்தா தளவில் காலம்
எம்மகிமை யெச்செயல்க ளென்பனவுங் காட்டியெழுந் தருளி நின்றான்
அம்மையினி லவதரித்த வத்திரிப்பே ரருமுனியே யவத ரித்தான்
இம்மையினிற் கேமன்முனி யெனவாங்கி லேயமொழி யேன்று மன்றே.
(4)

வேறு.

அன்ன முனிவர் பெருமான்மே லன்பிற் றகவோ ரந்தாதி
பன்னி நல்க வேண்டுமெனப் பரிவிற் கேட்பப் பகருமிந்நூல்
தென்னை கமுகு புடைசூழ்ந்த தெல்பால் முகவன் மடாலயத்தே
சொன்ன கவிஞன் பாடுதற்குத் தொடங்கா நின்று னவ்வெல்லை. (5)

ஆயி ரத்தொன் பான்மூன்று மாண்டு திங்கள் புரட்டாதி
ஆய தேதி பத்தொன்று மழகார் புந்தி வாரமதில்
ஆயு முனிவ னளப்பரிய வானந் தத்தே யமர்ந்திருந்தான்
நேய மாக நாவலனு நேரிற் கண்டா னடிவீழ்ந்தான். (6)

முனிவ ரேறே நின்பேரின் மொழியும் வெண்பா வந்தாதிக்
கினிய வாமீ கென்னலுமே யியன்று துறவோன் மனமகிழ்ந்து
கனிவே பாடு பாடுகென கருத்தினுள்ளே காப்புவெண்பா
நனியாங் கியையச் சரிசரியென் றுரைத்தான் முனிவர் நாயகனே. (7)

அன்று தொடங்கி யிந்நூலை யவாமீ தூர மொழிந்தனனால்
நன்று நன்றென் றன்பரெலா நாடி நவின்று மாயையினை
வென்று ஞான விழுச்செல்வ மேவி நின்றார் மேல்வீடும்
ஒன்ற மகிழ்வீற் புலவரிதை யுண்ப ரமுதா வுளமுவந்தே. (8)

வேறு.

இந்நூலை யிசைகவிஞன் யாரையெனி னிசைத்திடுகே னினியஞான
மெய்ந்நூலை யுய்த்துணர்ந்தோன் மாணவர்கடம்மினுள்ளே மேன்மைவாய்ந்
சென்னாலு மாலிமலி சிந்துபூந் துறைநகர்க்கட் சிறந்து வாழ்வோன் [தோன்
என்னாலும் புகழ்வரிய கவிநாரா யணசாமி யிசைமிக்கோனே. (9)

வெண்பா.

வள்ளலெந்தை கேமன்முனி மாதவன்மேற் பாமாலை
தெள்ளுசுவை மீதூரச் செப்பினனாற்—கள்ளவிழ்தார்
நாரா யணசாமி நாற்கவிஞ னொப்பவனுக்
காராயிற் கும்பமுனி யாம். (10)

திருச்செந்தூர் அஷ்டாவதானம் பிரம்மஸ்ரீ
மகாதேவ ஐயரவர்கள் இயற்றியது.

நல்லவாரி யங்கணா[1]விளாநகேமன் மாமுனிக்
கெல்லவாவு [2]பாமுன்வைத்தி யம்பினானந் தாதியே
[3]சொல்லவாணி வாரியுண்ணி தூய[4]தென்னு மேலிதை
யொல்ல[5]வார்சொல் வாரியானு மொப்புபாவு மிகையரோ. (1)

[1]நா-விள்-காத [2]பாமுன்-வெண்பா [3]சொல்-அ-வாணி-வாரியுண்ணி-அகத்தியன் [4]என்னுமேல்-என்றுசொல்வாரானால் [5]ஆர்--சொல்வார்-

வெண்பா.

நாரா யணசாமி நற்சிந்து பூந்துறையான்
வேராய்க் கேமன்முனி மேன்முதற்பா—பேராத
வந்தாதி சொன்ன வருமையுல கங்களிக்க
தந்[1]தாதி வீடுந் தரும். (2)
[1]ஆதி-வீடும்.

இராமநாதபுரம் ஜில்லா திருச்சுழித்தாலூகா இராமேஸ்வரம் தேவஸ்தானம்
கூத்திபாறை தமிழ்ப்பண்டிதர் மக-ா-ா-ஸ்ரீ மதுரகவி
முத்துக்கிருஷ்ண ராமானுஜதாசரவர்கள் இயற்றியது.

வெண்பா.

[1]ஆந்துறையு மாக்துறையு மான்ற வளநோக்கிப்
போந்துறையுஞ் [2]சான்றசிந்துபூந்துறையின்—வேங்[3]துறையின்
நாவலவ ஞரா யணசாமி [4]நாவலவன்
[5]ஆவலவ ஞவல வன். (1)

[1]ஆம்-எப்போது நீருள்ள-துறை-நதி அதாவது ஜீவநதியாகிய பொருநை யும் ஆம்-தக்க-துறையும்-நீராடு துறையுமுள்ள [2] சான்ற-மேலாகிய [3] உறையின்-மழைபோல [4] நா-நடு, வலம்-இடம் (எழாம்வேற்றுமையுருபு) நடுநிலைமையுடையவன் [5] ஆவலனு-ஆவலையுடையவனாக, வல்-விரைந்து-அவன்.

ஆங்கிறைவன் காட்டா னவனிலையை யெத்தனைக்கும்
ஈங்கிவனே காட்ட வியையுமென்றே—யூங்[1]குணருக்
கேமல்வரற் கேமல்வரக் கீர்த்தித்தா னந்தாதி
[2]தேமல்கு தேமல்கு தேம். (2)

[1]உணரு-உணர்ந்து (வினையெச்சம்) [2] தேம்-அல்கு-நாணும்படியான தேமல்கு-தெய்வத்தன்மை நிறைந்த-தேம்-இனிமையது.

---

இந்திரபீடங் கரபாத்திர சுவாமிகளாதீன பரம்பரை ஸ்ரீலஸ்ரீ
இராமையா தேசிக சுவாமிகளின் பிரதம மாணுக்கரும் விருதுபட்டி
ஆநந்தாச்சிரம பரிபாலனருமான விருதுபட்டி மக-ா-ா-ஸ்ரீ
பா. மு. நாராயணசுவாமி நாயுடு அவர்கள் இயற்றியது.

எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

---

ஆதியு நடுவு மந்தமி லொளியென் றருமறை முடிபாற் றின்பச்
சோதியிங் குருவா யன்பர்த மன்பிற் றோன்றிய திகதுஞ்சான் றமா
லோதுவோர்க் குறித்தா யுறுபவர்க் குயர்வா யுணர்வுளோர்க் குணர்வினி
[லுணர்வாய்
நீதியின் முனிவை முனிந்ததொன் முனிவ னிகரிலா கேமன்மா முனிவன். (1)

மீதுசெக் தமிழின் வசனநற் போதான் மிக்கவங் தாதியாய்த் தொடுத்துப்
பூதலம் புகழச் சாற்றினன் சிந்து பூந்துறை வாசிகௌ ரவனு
யோதுநற் குலத்தோன் பாலுவின் றவத்தோ னெப்புநா ராயண சாமி.
சாதுவின் பலத்தைப் பெறுவனேல் மற்றியார் சார்ந்திடா ரப்பலன் மாதோ. (2)

எட்டயபுரம் சமஸ்தானம் சம்புலிங்கபுரம் மக-ா-ா-ஸ்ரீ
வீராகவக் கவிராஜரவர்கள் குமாரர் மக-ா-ா-ஸ்ரீ
திருவண்ணாதக் கவிராஜரவர்கள் இயற்றியது.

வெண்பா.

எழுத்தசையுஞ் சொன்னயமு மின்னிசையு மெங்கும்
வழுத்தும் பொருணயமும் வாய்ப்ப—பழுத்தபெரு
மன்பானற் கேமன்முனிக் கந்தாதி யோதியநன்
மன்பேரைக் கேண்மின் மகிழ்ந்து. (1)

பொன்சிந்து பூந்துறைவாழ் புண்ணியவான் பாலுவெனும்
மன்சிந்தை வாய்ந்த மகனாகி—யின்பந்தோய்
நாரா யணசாமி நாவலன்மற் றெக்கலையும்
பாரா யணஞ்செய் பவன். (2)

மக-ா-ா-ஸ்ரீ ஷை திருவண்ணாதக்கவிராஜரவர்கள் சகோதரர் மக-ா-ா-ஸ்ரீ
திரவிய சங்கரநாருயணக் கவிராஜரவர்கள் இயற்றியது.
எண்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

பொற்புறுசெந் தாமரையா டங்குஞ் சிந்து
பூந்துறைவாழ் தக்ஷிணா மூர்த்தி யென்னும்
சிற்பரன்சேர் மடாலயங்கோ வில்கொள் கேமற்
றிருமுனிமேல் வெண்பாவந் தாதி தன்னை
யற்புதமாய்ப் பகர்ந்தனன்கற் கண்டோ பாகோ
அருந்தேனோ வமிழ்தோமுக் கனியோ வென்ன
நற்புகழ்போ லீஸ்பென்ச னின்சு பெக்டர்
நாரா யணசுவாமி நாவல் லோனே. (1)

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

## அவையடக்கம்.

பித்த ணர்விரி பீடுயர் பாவினைச்
சுத்த மாசெனச் சொற்றிடு சூழ்வினர்
பத்த ஞன்பகர் பண்பெறு பாவினைச்
சித்த மேகொடு செவ்விதென் பாரரோ.

B. B. நாராயணசுவாமி நாயுடு இயற்றிய

## இரதபந்தம்.

கே

மா ம ரே

ரி கா ன் ம ல

த் ய னி மு ர் ம கா

ண் மை யு ன் னி னீ ள் பீ ரு

கே ர் வா ர் ம ய வா க மி வி ள்

ய ம் பா வு ர ஞ் சி ர் கே

ரி தி த் சை ர் சே ஞ்

மெ ய் க் க ன

ள் கே ரி

ள்

தா வி

வெண்பா.

தாள்விரிகேள் மெய்க்கனஞ்சேர் சைத்திரியம் பாவுரஞ்சிர்
கேள்விமிக வாயமர்வார் கேண்மையுன்னி—னீள்பீரு
காமர் முனியத்ரி கான்மல ரேமமா
கேமன் முனியரசைக் கேள்.

## இரதபந்தம்.

கே

தி ம றை

பு ஞா ன் று ம

ன் ம று மு ம நா ய்

வி ய் டை வு னி ஞ ட் டு வா

ல் க ன் பொ ம் ற டி

ந் து ற் ரு ட்

ய் ரு டா

ஞா ட் ட் ன் ய

ர் பு ட் கே ன் ம டி

சி று நா ட்

வெண்பா.

நாட்டியன்மன் கேட்புருசிர் ஞாட்புட்கேட் டாருய்ந்தற்
றூட்டிறம்பொன் கல்வி யடைவுனி—ஞாட்டுவாய்
நாம முறும்ன்பு ஞான்று மறைமதி
கேம[illegible] முனிபொற்றூட் சே.

ஸ்ரீ

# கேமன்முனிவர் வெண்பா வந்தாதி.

காப்பு.

கேமன் முனிமலர்த்தாள் கீர்செய்வெண்பா வந்தாதி
சேம முனியறையச் சீரனை—வாமமுடன்
நத்தி வினையெல்லாம் நல்குசிந்து பூந்துறைவாழ்
சித்தி விநாயகனைத் தேர்.

நூல்.

மணிகொண்ட செல்வவெழில் மன்னவெஃகி யாரும்
பணிகொண்ட லாங்கேமல் பண்பி—னணிகொண்ட
தாணிதம் போற்றி தமியேன் றனக்கினிய
காணியெனக் கொள்வேன் கனிந்து. (1)

150273

கனிந்துமனந் தூண்டக் கரமலர்கள் கூம்பக்
குனிந்துசிரந் தாழக் குதித்து—நினைந்துநற்சீர்ப்
பாடிப் பணிமின் முனிகேமல் பாதமலர்
கூடிக் களிப்பீர் குணத்து. (2)

குணங்குண மென்றுலகு கூறு முழவு
கணங்கண மென்று கறங்க—பிணங்கொண்டு
சுற்றத்தா ரேகுமுன் சூழு முனிகேமல்
*பற்றற்றார் பாதமலர்ப் §பற்று. (3)

பற்றிலர்நின் பொற்றாள் பழவடியார் தொண்டுசெய்
கற்றிலரெண் கீர்த்தி கனிந்துரையார்—வெற்றிவரே
சேர்புன் கதியெதெனச் செப்புகேன் கேமன்முனி
ஆர்நன் குணநிதியே யாய்ந்து. (4)

---

*பற்றற்றார் பற்று-அற்று-ஆர். §பற்று சேவை.

ஆய்ந்தமைந்த கேள்விபொறை யாருயிர்க்கட் கண்ணோட்டம்
வாய்ந்தமைந்த கேமன் மௌனியனே—சாந்தமுந்தி
நின்னணியே சூழ்ந்து நெருங்கும் பழவடியார்
முன்னணியே வைக்க முயல். (5)

முயலுவா யுள்ளமே மூழ்குமெய் யன்பின்
‡வியலுவா மான மிகவே—கயல்விழியார்
மாய வலைகடந்த மாதவனாங் கேமன்முனி
றாய வடியவர்க டொண்டு. (6)

தொண்டே புரிந்து சுகவழியீ தென்றுமெய்ம்மை
கண்டே யிரவுபகல் காணாத—விண்டலத்தே
யேகி யிருக்கவெண்ணி லெவ்வுலகு மெண்கேமல்
யோகி யுயர்பொற்றா ளுள்ளு. (7)

உள்ளா ‡யுயர்மனனே யுத்தமனாங் கேமன்முனி
கள்ளா ரரவிந்தக் காலிணைக்கே—வெள்ளநிகர்
பத்தியெனும் வித்துவித்தி பாசமென்னன் நீர்பாய்ச்சி
முத்திமுழுப் பேறுபெற முன்னு. (8)

முன்னைய வல்வினைகள் முன்னில்லா தேகிவிட
முன்னுதிநீ கண்டாய் முடிவிலன—பன்னுசித்தி
செய்துயர்ந்த கேமன்முனி செந்தா மரையடியில்
‖மைதுடர்ந்த நெஞ்சே மதித்து. (9)

மதிக்கு மதியிரவி வானவர்கோன் சேய்வேள்
உதிக்கு விரும்பியமா றானு—பதிக்கமலன்
எல்லாரு நீயே எனக்கேமற் சாமி§யென்னே
பல்லாரு வந்துவந்திப் பார். (10)

பாரானாய் விண்ணானாய் பாவகனு மானாய்மேல்
நீரானாய் காலானாய் நீயேயென்—றோர்வேனான்
ஆதலாற் கேமன்முனி யாதெனவே யாராய்ந்து
காதலுற கொள்கேன் கனிந்து. (11)

‡ வியலுவா வியல்—விரிந்த உவா—கடல். ‡ உயர்—உயர்வு (முதனிலை தொழிற்பெயர்). ‖ மை—குற்றம். § என்னே—என்ன ஆச்சரியம்.

கனிவாய் முலை†கல் கடுக்கண் முலைபல்
*பனிவாய் நுவர்ச்சியல்குல் பாம்பா—மெனவறைவர்
||சாந்துறை மாற்று முனிகேமல் சார்சிந்து
பூந்துறை மாதைப் புனைந்து. (12)

புனைவாய்நின் மாலையைமால் போக்கியிப்பெண் கொங்கை
நனைவாய்த் திணிமருமம் ‡நல்க—முனிகேமல்
எல்லாம் வலசித்த வீது நினக்கரிதோ
நல்லாய் மிகவும் நயந்து. (13)

நயப்பதியா னெண்ணிறந்த நானிலம்பொய் நன்மை
பயப்ப§தில்யா தொன்றுமெனப் பாத்து—வியப்பதுசெய்
தாராயுங் கேமன்முனிக் காளானார்க் கென்றென்றும்
பாராயுந் தொண்டுசெயும் பண்பு. (14)

பண்பார் குணமும் பலகலையும் பத்தியும்
எண்பார் மகழ்சிரு மெய்துமால்—விண்பார்¶மீன்
கொஞ்சமென்ன oமன்பதைகள் கூப்பித்தாள் கேமன்முனி
கஞ்சமென்னன் கால்தொழுதக் கால். (15)

()காலுணவை செய்யநின்று கால வவதியின்றி
காலுணவை யுண்டுதவங் கண்டென்பயன்—வாலுணர்வர்
[]பூந்துறைகண் டேத்துகே மற்பூமான் வாழ்சிந்து
பூந்துறைகண் டெய்மின் புகழ்ந்து. (16)

புகழ்வழியென் னைவ்வெவர்க்கும் புண்ணியஞ் செய்து
திகழ்வழிபுல் லூனையுணல் சீத்து—மகிழ்வழங்கு
சோதர தத்துவத்தைத் தோயவுளா கேமன்முனி
ஆதரவா மென்றுமென வாய். (17)

ஆயுநீ யப்பனுநீ யன்பனுநீ யென்னிலங்கு
வாயுநீ வாய்மையுநீ வான்மறைநீ—யாயின்மற்றிற்
றெல்லாநீ யெற்காவா யெண்புகழ்சேர் கேமன்முனி
நல்லாய்நீ யல்லாயெம் நாள். (18)

---

†கல்—மலை; முலைகல்—முல்லை பல்; *பனிவாய்-குளிர்ச்சிவாய்ந்த; ||சாந்துறை-சாகின்றவழி. ‡நல்க—நல்குக; (வியங்கோள் வினைமுற்று) §இல்யாதொ[illegible]ன்று-யாதொன்றுமில்லை. ¶மீன்—நட்சத்திரம்; oமன்பதைகள்—மனிதர்கள். ()கால் காலானது-உள்-மனம்-நவை துன்பு; கால் காற்றாகிய-உணவை—ஆகாரத்தை []பூந்துறைகண்டு புகுந்து இருப்பிடத்தைச்செய்து; "காலுள் நீரோடுகால்வாய்களில்" எனினும் அமையும்.

நாளு நெருப்பும்விட நாகமு *நாருநவக்
கோளு நலிவுசெயுங் †கோளுடைத்தோ—தாளுடைய
வத்தனுங் கேமன்முனி யந்தா மரையிணைத்தா
ணித்தனுங் கொள்வா நிலந்து. (19)

நிலத்துயிர்போய் தேகமதை நீளக் கிடத்தி
வலத்துவந்தே மக்கள்கொள்ளி வைத்து—குலத்தயல்போ
லேகுமுன் கேம விறையவனே நல்லறிவு
வாகுவி னல்காய் மகிழ்ந்து. (20)

மகிழ்ந்துன் னடியவரை வாழ்த்தி§யக மூலம்
அகழ்ந்துன் மயக்க மகற்றி—நெகிழ்ந்தமனங்
கொண்டே தொழுவனுனைக் கேமன்முனி கூறுமுளக்
கண்டே கருணைசெய்து கா. (21)

கார்மேனி கொண்ட கருணைக் கடலே
பார்மேனி வந்த பரிசோனே—சீர்மேவு
தேவனே கேமன்முனிச் செம்மையனே நின்னடிமைக்
‡காவனே ராக வளி. (22)

||அளியே யளியோ முனிகேம வீம்மான்
வளமா வரையின் ○வனிதை—பழுநகில
[]விண்டைச் சுமந்துமுறி மெல்லிடையை ¶மீட்டுறையக்
கொண்டை தனிலிருத்தல் கூறு. (23)

கூறுகின்ற பாவக் கொடியவினைத் தூறறுத்து
வீறுகொண்ட கேமன்முனி மிக்கோனே—ஏறுகைக்கும்
பெம்மானே நான்முகனே பேய்ச்சி முலையுண்ட
வம்மானே ஆண்டருள்வா யாய்ந்து. (24)

ஆய்ந்தைம் புலன்க ளடக்கியக லாமலன்பு
தோய்ந்த மனத்தே தொழுவனுனை—வாய்ந்ததவக்
கேமன் முனியரசே கேடில் விழுச்செல்வ
மாமணியே நோக்கியாண் மற்று. (25)

*நார்–நீர்; †கோள்–குணம். §அகமூலம்–அகங்காரக்கிளங்கு. ‡ஆவல்–நேர்–ஆக. ||அளியே வண்டே; அளியோ–கிருபையோ; ○வனிதை–பெண்; பழுநகில–பாரமான முலையாகிய; []விண்டை–மலையை; ¶மீட்டு–மேலும்; றைய–வருத்த.

மற்றொரு தெய்வம் வழுத்தாது வாயிதயம்
சற்றுநினை யாதுதலை தாழாது—முற்ற
*வரும்புதியோய் கேமன்முனி யப்பனே யென்னை
விரும்புதியோ பாவமிற வே. (26)

பாவ மிறவேநற் பத்தி யுறவேவெங்
கோவ மறவேநன் ‡கோள்பெறவே—தேவமொளிர்
எல்லிபகல் கேமன்முனி யெந்தாய் நினதுபுகழ்
சொல்லி மகிழ்வேன் துணிந்து. (27)

துணிந்துமுனி கேமற் றுறவசொன் மாலை
அணிந்து பணிவிடையை யாற்றிப்—பணிந்தமருஞ்
செல்வ முறமுன்யான் செய்தவ மேதென்று
சொல்வ னெனதறிவாற் சூழ்ந்து. (28)

சூழ்ந்தகன் றேயுயர்ந்து சொன்முடிவிற் பாழாமாங்
காழ்ந்துயர்ந்த தெண்ணி லலர்சோதி—வீழ்ந்துணரில்
ஞானவின்பம் மேலெனவே நல்கினனால் கேமன்முனி
போனபிறப் பின்பயனுப் போந்து. (29)

போந்தின்மலர்த் தேன்வெள்ளம் போந்துபொழிற் பாய்சிந்து
பூந்துறைவாழ் கேமன்முனிப் புண்ணியனே—நேர்ந்த
நினைப்பும் மறப்புமற்ற நிட்டைபெறக் காட்டி
இனிப்பிறப்பின் முத்தியரு ளெற்கு. (30)

எற்கே முனிகேம லீசன் தெரிந்தளித்தான்
தெற்கே முகநோக்கித் தேர்ந்திருந்து—பக்குவமா
இவ்வெண்பா வந்தாதி யேற்றித் துதிக்குமதி
§செவ்வெண்பா மாதருளைச் சேர்த்து. (31)

சேர்த்துக் குழைத்த சிவஞான வின்பப்பால்
வார்த்துப்பருக மகிழ்ந்தளிப்பாய்—கீர்த்தியுற்ற
†ஆங்கிலத்தில் கேமலெனும் அத்திரிப்பே ரந்தணனே
‖ஒங்கிலத்தில் வாழ்வேற் குவந்து. (32)

---

*அரும்—அருமையான-புதியோய்-புதுமையானவனே. ‡கோள்—பெற.
§செவ் எண்பாமாது—புகழ்பெற்றசாஸ்வதி. †ஆங்கிலம்—இங்கிலீஸ் பாஷை;
‖ஒங்கு-இலத்தில்-இல்லத்தில்.

உவந்தால் முனிகேம னுத்தமனே யுய்வேன்
*சிவந்தா லடியேனென் செய்வேன்—நிவந்துன்
இதவருளி னுய்ந்துயர்ந்தோ ரெண்ணிலரவ் வெண்ணர்
†கதவிருளின் மாய்ந்தொழிந்தார் காண். (33)

காண்பாய் மனனேநீ காணாத வத்திரியென்
மாண்பார் முனியே மகிழ்ந்திங்கன்—சேண்பாய்நற்
கீர்த்தி மிகவுற்ற கேமன் முனியரசா
வார்த்தி யுடனுதித்தா னுய்ந்து. (34)

ஆய்ந்தாய்ந்து நாடோறும் அற்பரையே பாடிநா
ஓய்ந்தோய்ந்துள் ளுட்கி யுலராதே—சார்ந்துபுவி
நாடுமுனி கேமானின் நல்ல திருப்புகழைப்
பாடவரு ணல்கு பரிந்து. (35)

பரிவாய்ப் பலதலங்கள் பன்னதிபோ யாடி
யெரிவாய் §நாகிகப்ப வெற்றுக்—கரிமலர்வாழ்
பொன்வந்து தாழ்கேமல் பூமான்வாழ் புண்ணியங்கொள்
தென்சிந்து பூந்துறையைச் சேர். (36)

சேரு மொருகுருவாக் கேமன்முனி சேர்ந்துநின்றான்
யாரு மறிய வவனடிக்கே—நேரும்
பணிவிடையைச் செய்வனஃது பாவவிருள் நீக்குந்
துணிவுடைய ஞானச் சுடர். (37)

சுடரொளிகொள் சூரியற்குச் சூரியனே யொப்பாம்
நடையிலுயர் ஞானிகட்கு ஞானி—புடவிமிசைக்
காவலர்க்குக் காவலனே கேமற் கனமுனிக்கு
‡கேவலநேர் யாரே கிடீர். (38)

கிளர்ந்தும் பிரபஞ்சங் கிளிஞ்சில்வெள்ளி போலாம்
வளர்ந்துதவு பெண்டிர்பிள்ளை வானவில்—தளர்ச்சிவரை
சிவிப்போ மென்பதுவுந் தேர்வரிதால் கேமன்முனி
காயப்போ திப்போது கண்டு. (39)

---

*சிவந்தால்—கோபித்தால்; †கதம்-கோபம். §நாகு-இகப்ப—நாகிகப்ப. ‡கேவலம்—பூர்ணமாக.

கண்டே *யினியுங் கடைக்கண் ||புரியாயென்
விண்டேறியகேமல் வித்தகனே—தெண்டேன்பால்
கன்ன லமுதாக் கனிசுவையா வென்றனுள
முன்னு முனதருளை யோர்ந்து. (40)

ஓர்ந்தேன் றிருவருளை யொய்யெனவே கேமன்முனி
தேர்ந்தே யுனக்கடிமை செய்துயர்ந்தேன்—தீர்ந்தே
யொருக்கால் பிறவி யுறினுநின் னன்பின்
பெருக்கால் தடுத்தாண்டு பேண். (41)

பேணி லவியுமலன் பெண்ணல்ல னாணல்லன்
காணி லுருவருவன் கண்டிடுவேன்—மாணலங்கொ
ளார்த்தியா லெவ்விதமா யார்வணங்கி னாலுமம்
மூர்த்தியாங் கேமன் முனி. (42)

முனிந்திடுவேன் கோபம் முனிகேமல் நின்றாட்
கனிந்திடுவேன் பத்திமலர் காண்பாய்—மலர்ந்துணிந்
தெல்லா நினதருளே யென்றிருப்பேற் கேன்றுநல்காய்
சொல்லாது சொன்னதோர் சொல். (43)

சொல்லா லளவையினாற் சுட்டவொண்ணா நின்பெருமை
கல்லார் முனிகேமல் கண்டறியா—தெல்லையிலாப்
புல்லாய் மரமாய்ப் புழுவாய்ப் பறவையாய்க்
கல்லாய்ப் பிறந்தொழிவர் காண். (44)

காணக்கண் கூசுமே கையெடுக்க நாணுமே
மாணொத்த சொல்லவாய் மாழ்குமே—எணொத்த
தேசிகனாங் கேமன்முனி சீரடியார் தொண்டுசெயா
†மாசினா மாந்தரைமண் மாட்டு. (45)

மாட்டென்கண் சாந்தமுதல் மாண்பார்ந்த சத்குணங்கள்
ஈட்டுபுகழ்க் கேமன்முனி என்மனமாங்—காட்டிலகப்
புற்றில் விருப்புவெறுப் பாமிரண்டு புல்லாவை
செற்றுக் களைவாய் சினந்து. (46)

---

* இனியும்-இன்னமும்; ||புரியாய்-புரியமாட்டாய் என்-யாதுகாரணம்
§ தீர்ந்தே-அறுதியாக. †மாசின்-குற்றத்தின் ஆம்-ஆகும்.

சிரிப்பர் விழுவர் திருத்தொண்டர் காற்றாள்
பரிப்பர் நயனம் பனிப்பர்—தரித்தகலை
வீசி மகிழ்வர் மிகுபுகழ்சேர் கேமன்முனி
ஆசி லடிய ரறி. (47)

அறிந்தறிந்து கேமன்முனி அம்புயப்பொற் றாளில்
செறிந்தொழுகிற் பேரின்பச் செல்வம்—சிறந்திடுமுன்
தீவினைகள் தீய்ந்தொழியுஞ் சீர்சால் பிரமைக்ய
பாவனைகை கூடும் பலத்து. (48)

பலத்தை விரும்பாது பாமாலை பத்திச்
சலத்தை மிகத்தெளித்துச் சாத்தி—நலத்தை
மாண்வேத நாயக மாற்கருள்செய் கேமன்முனி
தாண்மே தகத்தொழுவேன் தாழ்ந்து. (49)

தாழ்ந்தகுல மாச்சருவ சண்டாளர் யாவர்பொற்றாள்
வீழ்ந்துமன்ன ராய்கேமன் மெய்முனியே—ஆழ்ந்தவினை
மாய்ந்*திலா வண்யமுள வத்துவினை மன்னநினை
ஆய்ந்திடா மாந்தரையல் லால். (50)

†ஆலடிமா நாலடிகட் கன்றுபதே சஞ்செய்தோன்
‡காலடிசேர் கோயிலடிக் கண்சார்ந்து—பாலடிசில்
நாடோறுங் கேமன்முனி நாதர்க்கே நல்கின்வினை
காடேறிப் போகுங் கரிந்து. (51)

கரிந்துபுகை யோங்கக் கனயாகஞ் செய்தே
அருந்தமணி யாட்டை யறுத்துண்—ணருந்தவத்தீர்
கேட்டதெல்லா நல்குநங்கள் கேமன்முனி யின்காற்றாள்
வேட்டுமுடி சூட்டநய வீர். (52)

நயந்து மனைவிமக்க ணன்கு மதிக்க
வியைந்து நிதிகள்பல வீட்டி—||வியஞ்செய்து
கெட்டதுயர்க் காற்றுதுன் கேடில்பதஞ் சேர்ந்தனன்கா
லிட்டமுடன் கேமன்முனி யே. (53)

---

*இலாவண்யமுள-வத்து; மன்ன-சேர நினை-உன்னை. †ஆலடி-ஆலமரத்தடி; நாலடிகள்-நான்கு முனிவர்; ‡காலடி-பாதம். ||வியம்-செலவு.

ஏகாந்த மாயிருந்தே யெண்மூல மந்திரமென்
வாகார்ந்த வோரெழுத்தை மாத்திரை*மூன்—றுகாறும்
உள்ளெள் வாங்கி யுனையடைவேன் காகருணை
வெள்ளமே கேமல்விபு வே. (54)

வேந்தாகி விண்ணாளு மேன்மைவரி னுங்கொள்ளேன்
§சாந்துணையுங் கேமற் றவனுக்கு—மாந்தருளந்
தேக்குசிந்து பூந்துறையிற் றென்முகன்ம டாலயத்தில்
காக்குபயான் றொண்டுசெய்வேன் காண். (55)

காணட்ட மாசித்தி கைகட்டி நின்றுபணி
மாண்பத்தி யோடியற்றி வாய்ந்துநிற்கில்—சேண்புகழ்சேர்
சித்திகளைக் கேமன்முனி செய்தவையா வென்றெண்ணி
இத்தரையிற் சொல்லவல்லர் யார். (56)

யாரொருவர் நான்கொடுத்தே னெற்கீவா ரில்லென †நன்
னீரொருவி நின்றதிர்வர் நெஞ்சழியக்—‡காரொழுக்கு
மாரியென நன்மை வழங்குவாய் கேமன்முனி
வாரியென ○வான்கருணை வைத்து. (57)

வைத்துப் பொருள்காவார் மாளுங்கா லத்துதவப்
பித்துப் பிடித்த பெரும்பதர்போல்—செத்தொழியுங்
காலந் தெரிந்தாலுங் கேமன்முனி கான்மலர்த்தாள்
¶ஆலம் பிணிக்கெனவாய் வார். (58)

ஆய்வார்நற் ||சால்பை யவிர்புகழ்கொண் டாடுவார்
தோய்வார்நின் றொல்கருணைத் தோயத்தே—யெய்வார்
()வரவீட்ட மெல்லாம் முனிகேமல்[]மானீ
தரவாட்ட மில்லார் சகத்து. (59)

சகத்துக்கண் ணோங்குஞ் சகல நிலத்தும்
மகத்துக்கள் போற்று மதமில்—இகத்தே
முனிகேமன் மோனனே முன்வந்த சாட்சி
இனியேனும் புன்னெஞ்சே யெண். (60)

எண்ணி யறத்திற்கா வீந்தபொருண் மீண்டுமுற
நண்ண நகைகொளுமஞ் ஞானிகளைக்—கண்ணின்முன்
காணாத வாறு கடைக்கணிப்பாய் கேமன்முனி
கோணா மனத்துக் குறித்து. (61)

---

*மூன்று-ஆ-ஆம்—காறும்-அளவும், §சாந்துணை—சாகின்றவரை. †நன்னீர—நல்லதன்மை; ‡கார்—மேகம்; வாரி-கடல்; ○வான்-மேலான. ¶ஆலம்—விஷம். ||சால்பு—குணம்; ()வரவீட்டம்—வரமாகிய கூட்டம்; []மானீ—மால் நீ, தர-கொடுக்க.

குறித்தநெறி கூடக் குருபணியே கூடும்
மறித்திலை*யான் மாலாபம் வாய்ப்ப—விறப்பவே
யாதலால் கேமன்முனி யஃதடைய வெஞ்ஞான்றுங்
காதலால் கூப்புவேன் கை. (62)

கையடித்துச் சத்தியங் காணவும் வேண்டுமோ
மெய்யடுத்த வார்த்தையொன்று மேலலவோ—பொய்யடுத்த
ஆக்கை பிரிமுன் னருள்கேம லையநிற்காம்
வாக்கை ||யளிக்கும் வரம். (63)

‡வரமனதுள் வீற்றிருக்கு மாண்புடைய நீயே
இரவுபக லில்லா விடத்தாய்—கரவுமனர்
காணாக் காட்சியுநீ கேமலருட் கற்பகமே
()மாணாத னீயெனலுண் மை. (64)

மைவிழியார் மேல்வைக்கு வாஞ்சையினி லெட்கூறு
மெய்வழியார் கேமன்முனி மீதுவைப்பார்க்—[]கைவளியார்
மெய்கழியா நின்றவுயர் வீடுபெற மெய்ஞ்ஞானங்
கைவழியார் நெல்லிக் கனி. (65)

கனியிதழார் §கந்தரச்சங் கத்தரளந் தம்மை
இனியகுயில் முட்டை யெனக்கூட்—டினிற்சேர்
பொழிற்சிந்து பூந்துறைவாழ் கேமற் புனிதனே
¶எழிற்சிந்து நல்லமன மீ. (66)

ஈன வுடம்பொடுபோ யிவ்வாழ்வை யான்வேண்டேன்
ஞானமனோ தீத நலம்பெறவே—வானமதி
கண்டசகோ ரம்போல கேமன்முனி கான்மலர்த்தாள்
அண்டியன்பு செய்வே னமர்ந்து. (67)

அமர்செய் தெனைமறைத்த வாங்கார மென்னும்
[illegible]தமசகல நீக்குநற் றன்மை—யமர்ந்திடுமெய்ஞ்
ஞான விளக்கினை நல்குவாய் கேமன்முனி
வான மதிக்க வணத்து. (68)

வண்ணமுட னென்னறிவில் வந்தறிவாய்ப் போந்தென்றுந்
திண்ணமுடன் சான்றெனவே சேர்ந்திலகி—யெண்ணியிந்நாள்
என்னைத்தந் தானின் நிலைதறியக் கேமன்முனி
தன்னைத்தந் தானின்று தான். (69)

---

*ஆன்மாலாபம், இறப்பவே—மிகுதியாக. ||அளிக்கும்—காக்க. ‡வரமனது—மேலான மனது; ()மாணுதல்—மாட்சிமையுடையனுதல். []ஐவளியார்—சிலேத்துமமுங் காற்றும்நிறைந்த; மெய்—தேகம். §கந்தரச்சங்கத்தரளம்—கழுத்திலுள்ள முத்துக்கள்; ¶எழிற்சிந்து—அழகொழுகு. ‡‡தமசு—அகல.

தானந்த மான சகச நிருவிகற்ப
வானந்த நிட்டை யடைந்து*வலி—நானந்த
அல்லலெலாந் தீர வருள்வைத்துக் கேமன்முனி
சொல்லலாஞ் சொல்லைச் சொல். (70)

சொல்லிலா வூமனைப்போல் சொல்லிறந்து நீயாகி
னல்ல தெனக்குமுத்தி யாகாதால்—புல்லறிவு
மாற்றிப் புரையறவே மாறாத மெய்யறிவி
னாற்றல் வழங்கியெனை யாள். (71)

ஆழி யிடையே யலைதுரும்பு போலபல
வூழி திரிந்தே யுழல்வேனை—வாழியென
இந்நாட் கேமன்முனி காவாயே லின்னுயிர்போ
மந்நாட் காக்கவல்லா ரார். (72)

ஆரறிவார் நானோ வறிவன் முனிகேமால்
பாரோடு மண்டப் பரப்பறியா—நீருறநீழ்
அண்ட மனைத்திலுமா யப்பாலுக் கப்பாலாய்க்
கொண்ட நினதுகுணக் கூறு. (73)

கூறுங் குணமில்லாக் கொள்கையினே னென்கவலை
மாறும் படிக்கோடி வந்தணைந்தேன்—பேறுபெறு
சிந்தை கருதித் தெளிவித் தெனையாள்வாய்
எந்தை முனிகேமா வின்று. (74)

இன்று தொடங்கி யெழுமையுங் கேமன்முனி
நின்ற புகழேத்த நேர்ந்தனனால்—குன்ற
மனைய விருவினைபோ யந்தமில்பே ரின்ப
மனையில் வசிப்பேன் மகிழ்ந்து. (75)

மகிழ்மேவு கேமன்முனி மாதவற்கென் னையல்
பகர்வாய் திரும்பிப் பறந்தென்—முகமாகத்
தத்தாய் வரும்வரையுந் †தாரைமே லென்கண்கள்
வைத்தே யிருப்பேன் மதி. (76)

மதிதயிர்போ லுள்ள மறுகி முறுகி
விதிர்வுறுவேன் வேட்கை விடாது—சதிர்பெறவே
ஓதி யுணர்த்த ‡லுறுநீ யிளங்குருகே
தூது செல்ல வேண்டுங் §துரை. (77)

---

*வலிநானந்த-வலியனானென்னு மாணவமலங்கெட, †தாரை-வழி. ‡உறும்-கூடும்; §துரை-சீக்கிரம்.

துணையொடுபண் டேர்வண்டே சொல்லிமனந் தேற்றாய்
இணையினன் கேமன்முனி யெந்தைக்—கணையின்மேல்
வல்லயில்பாய் மஞ்ஞையென வாட மயக்கஞ்செய்
எல்லையிலா மோகத் திசைவு. (78)

இசைந்தென்னை யேகொடுத்தேன் கேமன்முனிக் ‡கின்ற
வசந்துன்னு மின்ப மடுத்தேன்—நிசந்துன்னப்
பெற்றுப் பிழைத்தேன் பிணிசெய் சனனவலை
யற்றுக் களித்தே னறி. (79)

அறியாது செய்திட்ட ¶வாசனைத்தும் நெஞ்சில்
குறியா தினிக்கேமற் கோவே—முறியாநற்
பாதையினிற் செல்லுநற் பக்குவத்தைப் பாலிப்பாய்
போதகுரு வாகப் பொலிந்து. (80)

பொலியுமுன் னன்பரொல்லா மின்பம் பொருந்த
நலிவுறுவ ளுனொருவ னன்றோ—இலகருளை
நாய்க்குங் கடையே னெனினுநீ கேமன்முனி
வாய்க்கும் படிக்கு வழங்கு. (81)

வழக்கம் வழக்கமென மாடாடுண் கெட்ட
பழக்கம் பயிலுமிப்பார்ப் பான்மை—யொழிக்கும்
வகையருள வேண்டும் முனிகேமன் மாலே
தகவதனின் மேலோ தவம். (82)

தவமேது செய்தேனோ கேமன்முனி சாமி
நவமாக வென்முன்னே நண்ணி—சிவயோக
மூட்ட வொருப்பட்டா னுடங்கு தமியேன்பால்
நட்டமீக் கொண்டு நலத்து. (83)

நலமேது மோராத நாயிற் கடையேனைச்
சலமேது நண்ணாத †தாவிற்—றலமேவ
நாதாந்த மோனமா நாட்டந்தந் தாட்கொண்டான்
வேதாந்த மாகேமல் வேந்து. (84)

*வேந்தழல்போல் வெண்கதிரோன் வெய்தெரிக்க மேனியணி
||சாந்தழலாய் நின்று தகிப்பதனால்—§சாந்தருவா
யென்ன விணக்குமோ கேமன்முனியை
பன்னு மினியகுயில் பார்த்து. (85)

---

‡இன்று-அவசம். ¶ஆசு—குற்றம். †தாவில்-கெடுதலில்லாத-தலம். *வேம்-தழல்; ||சாந்து—சந்தனம் அழலாய்; §சாம்—சாகின்ற; தருவாய்-தருணம்.

பார்புகழும் *பான்மணியே பண்புகளும் பன்மணியே
சீர்திகழுஞ் செம்மணியே தேமணியே—கார்மணியே
வான்மணியே யான்மணியே மாண்மணியேகான்மணியே
மான்மணியே கேமன் மணி. (86)

†மணிவாசற் றூங்கவொழிர் மாடஞ்சேர் சிந்தா
மணிவாச வன்மான வாழ்ந்தே—பிணிவாசம்
oவானவ ரீய மாணமுற்றூர் கண்டயர்ந்தேன்
||வானவர்பேண் கேமன்முனி வா. (87)

¶முனியா முனிகே மலேநீ முனம்வந்
தினிவா தினியா மிழுக்கை—யினிதாங்
கடியா விடியுண் கடியால் மடியில்
குடியின் மிடியைக் ()குடி. (88)

குடிகெடுக்கும் மாயையினைக் கொன்றகுணக் குன்றே
அடிகொடுத் தென்னையா ளன்பே—முடியெடுத்த
மன்னவர் போற்றிநிற்குங் கேமன்முனி மாமலர்த்தாள்
சென்னிமிசை வைப்பேன் றெறிந்து. (89)

தெரிந்துணர்வா ருள்ளத்திற் சேர்ந்துறையுந் தேவே
விரிந்தவுல கான்ற விபுவே—கரந்தொளிரும்
என்னுயிரோ யென்னின் னுயிர்க்குயிரோ யென்னறிவின்
மன்னறிவே கேமன்முனி வன். (90)

கேமன் முனிவா கிருபைப் பெருங்கடலே
காம மகற்றியவென் கண்மணியே—தாமரையும்
வேதச் செழும்பொருளே மெய்ஞ்ஞானச் செல்வத்தை
நாதப் பழம்பொருளே நல்கு. (91)

நல்லவா வென்னை நயந்தவா யெத்தொழிலும்
வல்லவா ஞான வளத்தவா—‡இல்லவா
இல்லவா வேழுலகு மானவா யானடிமை
யல்லவா சொல்லவா வாம். (92)

ஆமுணவு தாமா வனைத்து மளிப்பவனீ
தேமுலவு பேரின்பந் தெள்ளுபரந்—தாமமருள்
தொம்பதனே தற்பதனே சொல்லு மசிபதனே
எம்பெரும கேமன்முனி யே. (93)

---

*பால்—உரிமை—மணி. †மணி-அசையாமணி; சிந்தமணிவாசவன்—இந்திரன; oவானவர்-வான்-நவர்-நவக்கிரகங்கள்; ||வானவர்-தேவர். ¶முனியா-கோபித்து வாது—உனி—எண்ணி; கடியால்—இன்பத்தால்; கடியால்—கலியாணத்தால்; மடியில்—சோம்பேரித்தனமில்லாத; மிடி—துன்பம்; ()குடி—குடித்துவிடு ‡இல்-இல்வாழ்க்கை; அவா-ஆசை; இல்லவா இல்லாதவனே.

எம்பெருமான் கேமன்முனி எப்பொருட்கு மீசனே
* அம்பரமா யெவ்வினைக்கு மானவனே—இம்பர்மிசை
சுத்தசன் மார்க்க சுகமெய் நிலையிலெனை
வைத்தருள்பா விக்க மகிழ்ந்து. (94)

மனத்தேத மாய்க்கு மருந்தே மலத்தைச்
சினத்தே துணிக்கும்வைவாட் செய்ய—முனிக்கேமால்
நல்லொழுக்க மொன்றையே நானடைய நானுடைய
புல்லொழுக்கும் புன்குணமும் போக்கு. (95)

போக்குவர வற்றபரி பூரணனே பூதலத்தில்
யார்க்கு நலனதுசெய் யேந்தலே—நீக்கமற
வென்னிற் கலந்தோய்நீ கேமவெந்தா யென்னிலெனக்
குன்னிற் றருதுணையா ருண்டு. (96)

உண்டாய சீவ ரொருங்கே யுனக்கொழியாத்
தொண்டாயிற் கேமன்முனித் தொல்பரனே—பண்டாற்கிழ்
நால்வர்க்கு நல்குமறை நன்கு பெறுதற்கென்
போல்வற் கடாதோ புகல். (97)

§புகல்மறைக்கப் பாலாய் புதர்வர்க்கப் பாலாய்
மிகுநிழற்கப் பாலாய் மேயோன்—தகவிலாப்
புல்லவர்க்கு மாறுவான் போற்றுநர்க்கு மாறுவான்
நல்லவனெண் கேமன்முனி நன்கு. (98)

†நன்குதிரை யில்லா நளிர்கடலே மாவாசி
யென்குதிரை யேறு மிறையவனே—புன்குதிர்நேர்
தேகப் பரிசமிலாச் சீர்மையனே கேமன்முனி
சாகப் பிடாதவரந் தா. (99)

தாருவினிற் கற்பகமே ¶சான்றசபி லங்களினுண்
மேருமிக வேற்றமது மேதினியில்—யாருமறி
சேதனரிற் சேடன் சிறந்தமணி கேமன்முனி
மாதவரி னல்ல மணி. (100)

வாழ்த்து.

வலமுயர்வே லைந்தாம்ஜார்ஜ் மன்னவன் றேவி
இலகொளிசேர் கேமன்முனி யெம்மான்—நிலவுபுகழ்
அன்புற்றிந் நூற்பதித்த ஆண்டவன் அச்சாபீஸ்
அன்பருடன் வாழ்க வமைந்து.

முற்றிற்று.

---

* அம்பரம்-அம்பு-அரம். §புகல்மறைக்கு-அப்பாலாய், புதல்வர்க்கப்-பாலாய்-சாதுசங்கவசமாய்; மிகுநிழல்-கப்பு-கப்புகளுடைய-ஆலாய்-ஆலமரமானவனே; மாறுவான்-மாறுதலையுடையவன்; ஆறு-ஒழுங்கு-ஆவான். †நன்கு-திரை-அலை; சா[illegible]ரணம்-கப்பிடாத-மூடாத. ¶சான்ற-ஏற்றமானது; ஏற்றமது-சிறந்தது.